# அகஸ்தியர் தந்த சாபம்

## சாந்திப்பிரியா



*முனிவர்கள் நகுஷாவை பல்லக்கில் தூக்கிக் கொண்டு சென்றனர்*

அகங்காரம் கண்களை மறைத்து புத்தியைக் கெடுக்கும் என்பதற்கு ஆதாரமாக உள்ள ஒரு கதை இது. பல்லாண்டுகளுக்கு முன்பு யாயாதி என்ற முனிவருடைய மகன் நகுஷா என்பவன் பூலோகத்தை ஆண்டு வந்தான். அவன் பாண்டவர்களுடைய முன்னோர்களில் ஒருவன். இஷ்டவாக்கு பரம்பரையை சார்ந்தவன். வேத பாடங்களை நன்கு கற்றறிந்து அதற்கேற்ப தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவன். அனைவராலும் விரும்பப்பட்டவன். சற்றும் கர்வமே இன்றி ஆண்டு வந்தவனுடைய குரு வசிஷ்ட முனிவர் ஆவார். விருப்பு மற்றும் வெறுப்பை தவிர்த்து வந்து, தம்முடைய அரசை சிறப்பாக ஆண்டு வந்தவன் பல்வேறு யாகங்களையும் செய்தான். அவை அனைத்திலும் சிறந்து

விளங்கியதே அவன் செய்த நூறு அஸ்வமேத யாகங்கள். அதனால் அவன் பல்வேறு சக்திகளைப் பெற்றிருந்தான்.

அவன் வாழ்ந்து கொண்டு காலத்தில் இந்திர லோகத்தில் ஒரு பிரச்சனை ஏற்பட்டது. பிராமண குலத்தைச் சார்ந்த விருத்திரசூரா என்ற அசுரனை கோழைத்தனமாக ஏமாற்றிக் கொன்ற பாவத்திற்காக இந்திரனுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை தோஷம் தோன்றியது. அதில் இருந்து தப்புவதற்காக எவரிடமும் கூறாமல் இந்திரன் தன் இருப்பிடத்தை விட்டு ஓடிச் சென்று வேறு ஒரு இடத்தில் ஒழிந்து கொள்ள இந்திர லோகப் பதவி காலியாகக் கிடந்தது. அனைவரும் இந்திரனைத் தேடி அலைந்தனர், ஆனால் அவர் எங்குமே கிடைக்கவில்லை. இந்திர லோகப் பதவியை காலியாக வைத்திருக்க முடியாது என்பதினால் தேவர்களும் முனிவர்களும் நன்கு கலந்தாலோசனை செய்த பின் பூமியை ஆண்டு வந்த நற்குணம் கொண்ட நகுஷாவிற்கு அந்தப் பதவியைக் கொடுத்து இந்திர லோகத்தில் முடி சூட்டினர்.

முதலில் நற்பண்புகளுடன் ஆண்டு வந்த நகுஷாவின் செயல்பாடுகள் மெல்ல மெல்ல மாறத் துவங்கியது. தேவர்களுக்கு அதிபதியாகி விட்டோம் என்ற இறுமாப்பு அவனைப் பற்றிக் கொண்டது. அவனுடைய நல்ல குணங்கள் மறையத் துவங்கின. இப்படி இருக்கையில் தேவேந்திரனின் மனைவியின் அழகில் மயங்கிய நகுஷா அவளை தனக்கு உரிமையாக்கிக் கொள்ள முடிவு செய்து அவளை தன்னுடன் பூலோகத்திற்கு வந்துவிடுமாறு அழைத்தான்.

பாவம் அவள் துன்பமுற்றாள். பதிவிரதையான அவள் அதற்கு ஒப்புக் கொள்ள மறுத்து தேவர்களின் குருவான பிரகஸ்பதியின் உதவியை நாடினாள். ஆனால் அதை அறிந்த நகுஷா பிரகஸ்பதியை பயமுறுத்த அவர் அவளுக்கு அறிவுறைக் கூற முடியாமல் ஒதுங்கிக் கொள்ள, அவள் ஒளிந்து கொண்டிருந்த இந்திரனிடம் சென்று அவரிடம் வழி கேட்டாள். ஒளிந்து கொண்டு இருந்த இந்திரனை கண்டு பிடிக்க அவள் பார்வதி தேவியின் துணையைப் பெற வேண்டிப் பெற்றாள். தோஷ காலம் முடிவு

பெறாததினால் தான் உள்ள இடத்தில் இருந்து வெளி வந்து அவரால் நகுஷாவை வெற்றி கொள்ள முடியாத நிலைமை இருந்தது. ஆகவே அவர் நகுஷாவிடம் இருந்து தப்பிக்க வேறு ஒரு உபாயத்தைக் கூறினார். நகுஷாவுக்கு இருந்த ஒரு சாபத்தைப் பற்றி ஏற்கனவே பிரகஸ்பதி அவளிடம் கூறி இருந்தார். அது இப்போது பயன்பட்டது. அதன்படி சசி தேவி நகுஷாவிடம் ஏழு முனிவர்களான சப்த ரிஷிகள் தூக்கி வரும் பல்லக்கில் அவன் ஏறி வந்தால் அவனுடன் செல்ல சம்மதிப்பேன் எனக் கூறுமாறும், அதில் அவன் சிக்கலில் அகப்பட்டுக் கொள்வான் எனவும் கூறி அனுப்பினார். அவளும் அதன்படி நகுஷாவிற்கு செய்தி அனுப்பினாள்.

விதி விளயாடத் துவங்கினால் எவர் என்ன செய்ய முடியும் ? சப்தரிஷிகளை அவன் அழைத்து ஒரு பல்லக்கில் தன்னை ஏற்றிக் கொண்டு தேவலோகம் செல்லுமாறு ஆணையிட்டான். தேவேந்திரப் பதவியில் அவன் இருந்ததினால் அவன் வார்த்தையை யாராலும் தட்ட முடியாது. ஆகவே அவனிடம் பயந்து கொண்டு சப்தரிஷிகளும் வேறு வழி இன்றி ஒரு பல்லக்கைக் கொண்டு வந்து அதில் அவனை ஏற்றிக் கொண்டு இந்திர லோகத்திற்கு பயணம் ஆயினர். அந்த முனிவர்களில் மிகவும் குட்டையானவர் அகத்திய முனிவர். மற்ற முனிவர்களோ அவரை விட உயரம் அதிகம். அவர்களுடைய வேகமான நடைக்கு அவரால் ஈடு கொடுக்க முடியாமல் இருந்ததினால் பல்லக்கு ஆடியது. பல்லக்கில் அமர்ந்து இருந்த நகுஷாவோ காமம் கொந்தளிக்க விரைவாகப் போ, விரைவாகப் போ என்ற அர்த்தத்தில் சமிஸ்கிருதத்தில் சர்ப, சர்ப எனக் கத்திக் கொண்டே இருக்க ஆடிய பல்லக்கில் இருந்தவனின் கால் அகத்திய முனிவருடைய தலையில் பட்டது. சர்ப என்றால் வேகமாக மற்றும் பாம்பு என்ற இரு பொருளும் உண்டு. தன்னைக் காலினால் உதைதது அவமானப்படுத்தியதாக கருதிய அகஸ்திய முனிவர் கோபமுற்றார். அவனுக்கு சாபமிட்டார். “சர்ப, சர்ப என கூவிக் கொண்டு என்னை கால்களினால் உதைத்தாயே அதனால் அந்த வார்த்தையின் பெயரில் வரும் சர்பமாக நீ பூலோகத்தில் பிறந்து உன்னுடைய வருங்கால சந்ததியினர் மூலம் சாப விமோசனம் பெற வேண்டும்.

அப்பொழுது உன் மனதில் தோன்றும் மூன்று கேள்விகளுக்கு அவர்கள் சரியான பதில் கூறினால் மட்டுமே சாப விமோசனம் பெற முடியும்.” நகுஷா முனிவரிடம் எத்தனையோ மன்றாடியும் மன்னிப்புக் கேட்டும் அவர் சாபத்தை விலக்கிக் கொள்ள மறுத்து விட்டார்.

பாவம் நகுஷா, சாபம் பெற்று பூமியில் ஒரு பெரும் மலைப் பாம்பாக மாறி பல்லாயிரம் வருடங்களாக காட்டில் வாழ்ந்து வரலானான். இந்திரனும் அதற்குள் சாப விமோசனம் அடைந்து இந்திர லோகப் பதவியை மீட்டுக் கொண்டான். இந்திரனுடைய மனைவியின் கற்பும் பறி போகவில்லை. காலம் ஓடியது. மகாபாரத வீரர்களான பாண்டவர்கள் வனவாசத்தில் இருந்தனர். ஒரு நாள் பீமன் காட்டில் வேட்டையாடச் சென்ற பொழுது மலைப் பாம்பாக இருந்த நகுஷாவிம் மாட்டிக் கொண்டான். தன் வம்சாவளியான பாண்டவனான அவனைப் பிடித்துக் கொண்டால் மட்டுமே தனக்கு சாப விமோசனம் கிடைக்கும் எனத் தெரிந்த நகுஷா தன் கதையை பீமனுக்கு எடுத்துக் கூறினான். பேசும் மலைப் பாம்பைக் கண்டு பிரமித்துப் போய் பீமன் அதனிடம் இருந்து தப்புவிக்க முடியாமல் திணறிக் கொண்டு இருக்கையில் காட்டிற்குச் சென்ற பீமன் திரும்பவில்லையே என்ற கவலையில் அவனைத் தேடிக் கொண்டு அலைந்த தர்மர் அங்கு வந்து சேர்ந்தார். தன்னிடம் அகப்பட்டுக் கொண்டிருந்த பீமனை விடுவிக்க பிராம்மண நெறிகளைப் பற்றிய மூன்று கேள்விகளுக்கான பதிலை தருமாறு தருமரிடம் அந்த பாம்பு உருவில் இருந்த நகுஷா கேட்டார். அதற்கு அவரும் சரியான பதிலைத் தர நகுஷா தான் பிடித்திருந்த பீமனை விடுவித்ததும் உடனடியாக சாப விமோசனம் பெற்றிட தன் நாடடிற்குத் திரும்பிச் சென்று மீண்டும் நல்லொழுக்கமாக ஆட்சியை நடத்தி வரலானான்.